2001 மே 30]

திரு. வெ. ஏழுமலை: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கன்னிப் பேச்சுப் பேசுவதால் எனக்கு 5 நிமிடங்கள், பசியையும் ஒதுக்கி வைத்துவிட்டு அளிக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அந்த சாரம் நூற்பாலையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாரத்தோடு முடித்தால்தான் பேச்சிலே சாரம் இருக்கிறது என்று பொருள். இத்தோடு முடியுங்கள்.

திரு. வெ. ஏழுமலை: ஆளுநர் உரை மொத்தத்தில் இந்த அரசின் சிறப்பான ஆளுமை உரை என்பேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறளுக்கேற்ப நடமாடும் இலக்கியமாய்த் திகழும் ஆளுமைக்குரிய எங்கள் அம்மா, டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் தமிழகம் செழிக்கும்; மக்கள் மனம் மகிழ்வர்; தொழில் வளம் பெறும்; பொய்யாமை அழியும்; வாய்மை நிலைக்கும். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-5-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

3. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—